பக்கங்கள் 16 + 02

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 18 ஞாயிற்றுக்கிழமை 01.06.2024 | அதிர்வு 302

## தோணி கவிழ்ந்து இருவர் உயிரிழப்பு

**முல்லைத்தீவில் சோகம்**

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு, உடுப்புக்குளத்தில் தோணியில் தாமரைப்பூ பறிக்கச் சென்ற இருவர், தோணி கவிழ்ந்து நீரில் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## 35 இற்கும் அதிகமான சபைகளை கைப்பற்ற தமிழரசு எதிர்பார்ப்பு

**தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒத்துழைக்கும் என்கிறார் சுமந்திரன்**



வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் 35 இற்கும் அதிகமான சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்பார்த்துள்ளது என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி 02▶



**அநுர அரசு தடுமாறும் நிலையில்**

## இலங்கை வருகிறார் ஐ.நா. ஆணையாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இந்த மாத இறுதியில் அல்லது ஜீலை மாதத்தில் இலங் கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். 02▶

*யாழ். மாநகர சபையின்*

## முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதி



யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதியாக பாத்திமா றிஸ்லா என்ற 02▶

## பூநகரியில் இளைஞர் வெட்டிப் படுகொலை!



கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிராய் குளத்தை அண்டிய பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 02▶

## ‘செல்பி’ மோகத்தால் இரு மாணவிகள் பலி

**முல்லைத்தீவில் துயரம்**



**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு, குமுழமுனை, கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயக் கேணியில் இன்று செல்பி எடுக்கச் சென்ற பாடசாலை மாணவிகள் இருவர், கேணிக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளனர்.

கேணிக்குள் தவறி வீழ்ந்த இரு மாணவிகளும் ஆபத்தான நிலையில் குமுழமுனை இளைஞர்களால் மீட்கப்பட்டு முல்லைத்தீவு 02▶

## சுன்னாகத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!



யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் கஞ்சாவுடன் 02▶

# யாழ். திருவள்ளுவர் கலாசார மண்டபம் யார் பொறுப்பில்?

## ஆராயும் இணை முகாமைத்துவக்குழுக் கூட்டம்
## இரண்டரை ஆண்டுகளின் பின் ஆளுநரின் பங்கேற்புடன்

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் இணைந்த முகாமைத்துவக்குழுக் கூட்டம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தலைமையில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

23.08.2023 திகதி இணைந்த முகாமைத்துவக் கூட்டம் இறுதியாக நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தை கூட்டுவதற்கான கோரிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் முன்வைத்திருந்தார். அதற்கு அமைவாக கடந்த புதன் கிழமை (28.05.2025) இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்தியத் தூதுவர் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயன், யாழ். மாநகர சபையின்



ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.டிலானி, கலாசார ஊக்குவிப்பு பணிப்பாளர் பிரசாட் ரணசிங்க ஆகியோர் இந்தக் கூட்டத்தில் நேரடியாகக் கலந்துகொண்டதுடன், புத்தசாசன, சமய விவகார கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹிந்தும சுனில் செனவி இணையவழியில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார்.

பல்வேறு விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

## தோணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

உடுப்புக்குளம் பகுதியில் உள்ள குளத்தில் இருவர் இன்று பிற்பகல் தோணியில் தாமரைப்பூ பறிக்கச் சென்ற வேளை தோணி கவிழ்ந்துள்ளது. இதன் போது தோணியில் இருந்த இருவரும் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், அவர்கள் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

அளம்பில் தெற்கில் வசிக்கும் 10 வயதுடைய சி.பிரணவன், 25 வயதுடைய இ.நிஷாந்தன் ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

38 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 60 கிராம் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ள போதிலும், அவரின் இலங்கை விஜயத்துக்கான திகதி இன்னமும் இறுதி செய்யப்படவில்லை.

சர்வதேச சமூகத்தால் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை கரிசனைகளை எவ்வாறு கையாள்வது எனத் தெரியாமல் அநுர அரசு தடுமாறிக்கொண்டிருக்கின்ற ஒரு நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

கடந்த வருடம் ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற பின்னர், ஐ.நா. அமைப்புக்கு மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் அளித்த அறிக்கையில், "புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மோதலுக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும், பொறுப்புக்கூறல் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கும், நல்லிணக்கத்தை நோக்கிச் செயற்படுவதற்கும், அடிப்படை அரசமைப்பு மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் உறுதியளிக்க வேண்டும்." – என்று குறிப்பிட்டிருந்தார்.

## 35 இற்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 377 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் 35 சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு எதிர்பார்ப்புடன் உள்ளது.

அண்மைய நாட்களில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களுடன் நாம் நடத்திய பேச்சுகளின் அடிப்படையில் இந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற சபைகளில் அந்தந்தக் கட்சிகள் மேயர், தவிசாளர் பதவிகளுக்கான உறுப்பினர்களை முன்மொழியவுள்ளதோடு அவர்களுக்கான ஆதரவை மேற்படி கட்சிகள் வழங்குவது என்ற பொதுப்படையான இணக்கப்பாடு காணப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதேநேரம் சாவகச்சேரி நகர சபை உள்ளிட்ட சம ஆசனங்களைப் பெற்ற சபைகள் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணக்கப்பாடு எட்டப்படாமையால் நாமும் உறுப்பினரைத் தவிசாளர் பதவிக்கு முன்மொழிவோம்.

அவ்வாறு முன்மொழியப்படும் உறுப்பினருக்குக் காணப்படும் ஆதரவின் அடிப்படையில் ஆட்சி அமைக்கப்படும்." – என்றார்.

## பூநகரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர், இனந்தெரியாதவர்கள் மேற் கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே உயிரிழந் துள்ளார்.

பூநகரி, செம்பங்குன்று பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய கந்தசாமி பிரணவன் எனும் இளைஞரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'செல்வி'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மேற்படி இருவரும் பூதன்வயல், மாமூலை பகுதியில் வசிக்கும் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவிகள் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## முதல் முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியை நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபைத் தேர்தலில் பட்டியல் வேட்பாளராக இடம்பெற்ற சகோதரி பாத்திமா றிஸ்லா ஆசிரியை அவர்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி தமது நியமன உறுப்பினராக நியமித்துள்ளது. இந்த நியமனத்தை உறுதிபடுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.





# யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிப்பு: 44 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொது நூலகம் தீமூட்டி எரிக்கப்பட்டு 44 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில், யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாநகர சபை ஆணையாளர், பொது நூலக நூலகர், நூலக உத்தியோகத்தர்கள், வாசகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

“நூலக எரிப்புச் சம்பவத்தை நாம் எமது அடுத்த சந்ததியினருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். அந்தப் பணிகளை ஊடகங்களே செய்ய வேண்டும்.” – என்று நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர்.

1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ். நாச்சிமார் கோயிலடியில் நடந்துகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜூன் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்த கடைகள் பலவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப் படுத்தியது. அதைத் தொடர்ந்துதான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது.

சிங்களப் பேரினவாதக் கும்பல் ஒன்று யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டுத் தீமூட்டிக் கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப் பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ். நூலக எரிப்பு நடந்து இன்றுடன் 44 ஆண்டுகள் நிறைவடைகின்றன.


















# மத்திய மலைநாட்டில் தொடர் மழை; வான் கதவுகள் திறக்கப்படுகின்றன!



மத்திய மலைநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக மலையகத்தில் இருக்கின்ற நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது.

இந்த நீரை வெளியேற்றுவதற்காக நேற்று (31) முதல் நீரேந்தும் பகுதிகளில் வான்கதவு திறக்கப்பட்டன.

அந்தவகையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வான்கதவு ஒன்று நேற்று மாலை முதல் திறக்கப்பட்டது.

அத்தோடு காசல்ரீ நீர்த்தேகத்தின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இதனால் நீர்தேக்க பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில் வாழும் குடியிருப்பாளர்களை அவதானத்துடன் இருக்குமாறு அதிகாரிகளால் பணிக்கப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வருகிறார் ஆணையர்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர் ஆணையர் வோல்கர் டர்க் இந்த மாதம் அல்லது ஜூலை தொடக்கத்தில் இலங்கைக்கு வருகை தருவார் என்று வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. ஆனால் அவரின் வருகைக்கான திகதிகள் எதுவும் இறுதி செய்யப்படவில்லை. இருப்பினும் அவரின் வருகைக்கு அரசாங்கம் இணங்கியுள்ளது என்பது மட்டும் உறுதியாகியுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் முறையாகும். கடைசியாக 2016 பெப்ரவரியில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் ஜெய்த் ராத் அல் ஹுசைன் வருகை தந்தார்.

வோல்கர் டர்க்கிற்கு முன்னர் அப்பதவியிலிருந்த மிச்செல் பச்லெட் அம்மையார் இலங்கைக்கு வருகை தர முயன்றார். ஆனால் அந்த விடயம் பரிசீலனையில் இருந்தது. சாத்தியப்படவில்லை.

மிச்செல் பச்லெட் அம்மையார் பதவியில் இருந்தபோது, இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் என்பவை தொடர்பான வெளிப்புற ஆதாரங்களைச் சேகரிக்கும் ஒரு பொறிமுறையை இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின்கீழ் மனிதஉரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் அமைத்துச் செயற்படுத்தத் தொடங்கியது. அப்போது முதல் இந்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்த்து நிற்கின்றது என்பது தெரிந்ததே.

ஜூலை 5, 2024 நிலைவரப்படி, அந்தத் திட்டத்தின் கட்டமைப்பிற்குள் நிறுவப்பட்ட களஞ்சியத்தில் சர்வதேச மற்றும் பலதரப்பு நிறுவனங்கள் உட்பட 250 அமைப்புகள் மற்றும் 220 க்கும் மேற்பட்ட சாட்சிகள் என 470 இற்கும் மேற்பட்ட வெவ்வேறு தரப்புகளின் சாட்சியங்கள், சமர்ப்பணங்கள், ஆதாரங்கள் என 96,215 முக்கிய விடயங்களின் பதிவுகள் உள்ளன. இவை இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவற்றை நிரூபிப்பதற்கான சான்றாதாரங்கள் என்று கருதப்படுகின்றன.

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் முன்னெடுக்கும் இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல் விசாரணையை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து எதிர்க்கும் பின்னணியிலேயே மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் வோல்கர் டர்க் இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2022 அக்டோபரில் தனது கடமைகளை ஏற்றுக்கொண்ட ஆஸ்திரிய நாட்டவரான வோல்கர் டர்க் சர்வதேச சமூகத்தால் எழுப்பப்பட்ட மனித உரிமைகள் கவலைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்து புதிய இலங்கை அரசாங்கம் தீர்மானகரமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கும் சமயத்தில் இங்கு வருகை தருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவை உயர்த்தித் தாருங்கள்!

## பிரதமரிடம் சர்வதேச இந்து மத பீடம் கோரிக்கை

கல்வி அமைச்சரும், உயர்கல்வி அமைச்சருமான பிரதமர் ஹரிணி அமர சூரிய தலைமையில் இந்து சமய பாட ஆலோசனை சபைக்கான அங்கத்தவர்களின் நியமனம் இடம்பெற்றது.

இதன்போது இராமகிருஷ்ண மிஷன் சுவாமி அக்ஷரானந்த மற்றும் சின்மையா மிஷன் சுவாமி குணாதித்தானந்த மற்றும் ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, இந்து கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் அனிருத்தன் கொழும்பு துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா ராஜ்ஜீ பாஸ்கரன் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் அலுவலகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது ஓய்வு பெற்ற பேராசிரியை சாந்தி மகேசன் பட்டதாரி ஆசிரியர்களின் நியமனம் பற்றி எடுத்து கூறினார்.

இதன்போது பாபுசர்மா, அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடம் தோறும் நூல் கொடுப்பனவுக்கு மட்டும் 7500 ரூபா கொடுக்கப்படுகிறது. எனவே எதிர்காலத்தில் பாதீட்டில் நல்ல தீர்வு மேற்கொண்டு அவர்களுக்கான கொடுப்பனவை உயர்த்த வேண்டும் என்று பிரதமரிடம் வேண்டிக்கொண்டர்.

அறநெறி பாடசாலைகளை ஊக்குவிப்பதற்கு பெற்றோர்களதும் மற்றும் தனியார் வகுப்பு நிலையங்களதும் பரிபூரண ஒத்துழைப்பு பெறுவதான் மூலம் அறநெறிக் கல்வியை வளர்க்கலாம் என்று இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் தெரிவித்தார்.

# சிறுதொழில் முயற்சியாளரை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டம்



(ஹஸ்பர் ஏ.எச்.)

சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தல் மற்றும் அவர்களுக்கான சந்தை வாய்பை அதிகரிக்கும் நோக்கில் தம்பலகாமம் பிரதேச செயலக வளாகத்தில் சிறு விற்பனை கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வேண்டுகோளுக்கு இணங்க இடம் பெற்ற இந்த விற்பனைக் கண்காட்சி நிகழ்வை தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

உளளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை அதிகரிக்கவும் ஊக்குவிக்கவும் குறித்த சிறு விற்பனை கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் மாவட்ட உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உலக சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டல்!

(பழுவூரான்)

ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்படும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் சுற்றாடல் அமைச்சால் சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக, மட்டக்களப்பு மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் நா. சுந்தரேசன் தலைமையில் மட்டக்களப்பில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான விழிப்புணர்வு செயலமர்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.










# வடக்கு, கிழக்கு காணி விவகாரம்: உதவ முன்வருகின்றது ஐ.நா. சபை

## ஆளுநர் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டம்

ஐ.நா.வின் பங்களிப்புடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி மற்றும் நம்பிக்கை கட்டியமைக்கும் செயல்திட்டமான லன்ரேன் திட்டத்தின் அறிமுக நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

ஐ.நா. வதிவிடப்பிரதிநிதியின் ஆலோசகர் பட்டிரிக், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினர், ஐ.ஓ.எம். நிறுவனத்தினர், யு.என். ஹபிட்டாட் நிறுவனத்தினர், வடக்கு மாகாண காணி ஆணையாளர், வடக்கு மாகாண பிரதி நில அளவையாளர் நாயகம், முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மாவட்டச் செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்து வெளியிட்ட ஆளுநர்,

“ஐ.நா.வின் அமைதிக்கான நிதியத்தின் மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் 2 ஆண்டுகளில், வட மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணியுடன் தொடர்புடைய முக்கிய சவால்களைத் தீர்ப்பதற்கும், அதற்குப் போதுமான முக்கியத்துவமுள்ள வகையில், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் இடையிலான நம்பிக்கையை வளர்த்தெடுப்பதற்குமான திட்டமாக இது அமைகின்றது.



இத்திட்டம், இலங்கையின் நீண்டகாலப் போர் பின்னணியில் காணிக்கான சம அளவிலான அணுகல் இல்லாமை தொடர்ச்சியான முரண்பாடுகளுக்கான மூலக்காரணமாக இருந்து வந்ததையும், மக்களின் இடம்பெயர்வு, மீளக்குடியமர்தல் மற்றும் சமூகங்களின் மீளிணைவு உள்ளிட்ட சிக்கல்களை உணர்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. காணி தொடர்பான இவ்வகை நம்பிக்கையின்மை நீண்டநாள் அமைதிக்குத் தடையாகவும், சமூக மாற்றத்துக்கு இடையூறாகவும் இருந்து வருகிறது. இவை, ஒழுங்கற்ற கொள்கைகள், செயலாக்க வலுவிழப்புகள் மற்றும் நுட்பக்குறைபாடுகள் ஆகியவற்றிலிருந்தும் உருவாகின்றன.

இந்தச் சவால்கள் பலதரப்பட்டவையாக உள்ளன – தனிநபர் உரிமை விவகாரங்கள், இடம்பெயர்வின் தாக்கங்கள், சமூகங்களுக்கிடையிலான வளங்களுக்கான முரண்பாடுகள், இராணுவம் கைப்பற்றியுள்ள குடியேற்ற நிலங்கள், சமூக கலந்தாய்வின்றி பாதுகாப்பு அல்லது அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிலங்கள் என வெள்வேறு நிலைத்தன்மையற்ற சிக்கல்கள் உள்ளன.

இந்தச் சூழலில், இடம்பெயர்ந்தோர், அகதிகள், மீண்டுவருபவர்கள், குடும்பத் தலைவியரான பெண்கள், முன்னாள் போராளிகள், மாற்றுத்திறனாளிகள், இளையோர்கள் ஆகியோரது நுட்பமான நலன்கள் கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தவை.

நில உரிமையில் பாலினத்தை அடிப்படையாகக் கொண்ட தடைகள், பெண்களுக்கு சட்டப்படி உரிமைகள் இருப்பினும் நடைமுறையில் பல்வேறு சவால்களை ஏற்படுத்துகின்றன. இந்தத் திட்டம் இதனை முற்றாக உணர்ந்தும் கவனத்துடனும் செயற்படுகின்றது.

அரசாங்க நிறுவனங்கள், மாகாண சபை, சிவில் சமூகம், சமூகத் தலைவர்கள், பெண்கள் மற்றும் இளைஞர் தலைவர்கள் ஆகியோருடன் நெருக்கமாக இணைந்து, வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு காணிகளை விடுவித்தல், மீளக்குடியமர்தல், சமூக மீளிணக்கம் மற்றும் வீடு மற்றும் காணி உரிமைகளைப் பெறுவதற்கான நீடித்த, சமச்சீர் தீர்வுகளை வழங்கும் திறனுடன் செயல்படுதல் – இதன் மூலமாக எதிர்கால முரண்பாடுகளைத் தவிர்த்து, சமாதானத்தையும் சமூக நம்பிக்கையையும் கட்டியமைக்குதல் என இந்தத் திட்டத்தின் நோக்கம் தெளிவானது.

எனவே, இந்தத் திட்டத்தை எங்களால் முடிந்த அளவு நேர்த்தியான ஒத்துழைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் அர்ப்பணிப்புடன் ஏற்றுக்கொள்ள முடியும். இந்தத் திட்டம், நம்பிக்கையை மீட்டெடுத்து, காணி என்பது உறுதியான சமாதானத்துக்கும், வளர்ச்சிக்கும், அனைத்து சமூகங்களுக்கும் ஒரு

தொடர்ச்சி▼





## வடக்கு, கிழக்கு காணி...

தொடர்ச்சி▲

நிலைத்தமைப்பாக அமையும் வகையில் அமையவேண்டும்." – என்று ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் ஆலோசகர், யு.என். ஹபிட்டாட் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் திட்டம் தொடர்பில் தமது நிலைப்பாடுகளை முன்வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள காணிப் பிரச்சினைகள் வேறு வேறானவை என மாவட்டச் செயலர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன் தற்போது அங்குள்ள காணிப் பிரச்சினைகள் எத்தகைய தன்மை வாய்ந்தவை அவற்றைத் தீர்ப்பதற்கு எவ்வாறான உதவிகளை இந்தத் திட்டத்தின் ஊடாக வழங்கலாம் என்பது தொடர்பிலும் மாவட்டச் செயலர்களும், மாகாண காணி ஆணையாளரும் குறிப்பிட்டனர்.

இதன்போது வடக்கின் 4 மாவட்டச் செயலர்களும், சூம் செயலி ஊடாக இணைந்த வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலரும் வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் கடுமையான நிலைப்பாடுகளை முன்வைத்தனர். அந்தத் திணைக்களத்தின் முறைய வர்த்தமானியை மீளப்பெறுவது தொடர்பில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்தி வருகின்றபோதும் நடைமுறையில் எதுவும் நடைபெறவில்லை எனவும் விசனத்துடன் அதிகாரிகளும், ஆளுநரும் சுட்டிக்காட்டினர். அது முக்கிய பிரச்சினை என்றும் அதுவும் இந்தத் திட்டத்தின் ஊடாகவேனும் தீர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்தத் திட்டத்தின் நடைமுறையாக்கம் தொடர்பில் தொடர் கலந்துரையாடல்கள் நடைபெறும் என ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் ஆலோசகர் குறிப்பிட்டார்.





# கிழக்கு மாகாணத்தில் மூலிகைத் தோட்டம் அமைப்பதற்குரிய ஆரம்பக்கட்டப் பணிகள்!

## *போதுமான வளங்களுடன், இடங்களுமுண்டு; மாகாண ஆணையாளர் வைத்தியர் நபில் தெரிவிப்பு!*

(அபு அலா)

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மூலிகைத் தோட்டங்களை அமைப்பதற்குரிய ஆரம்பக்கட்டப் பணிகளை கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் முன்னெடுத்து வருகிறது என்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபில் தெரிவித்தார்.

இலங்கையில் ஆயுள்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு உரிய அதிகமான மூலிகைகள் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இதற்காக செலவிடப்படும் செலவீனங்களை குறைத்து உள்நாட்டில் தொழில் வாய்ப்பை ஊக்குவித்து பாரிய திட்டமிடல்களுடன் ஆயுள்வேத மருந்துகளை உள்நாட்டிலே உற்பத்தி செய்வதற்கு சுதேச மருத்துவத் திணைக்களம் தீர்மானித்து, நாடு தழுவிய ரீதியில் சமூக மூலிகைத் தோட்டங்களை நிறுவுவதற்கு உரிய வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

அதற்கமைவாக, கிழக்கு மாகாணத்தில் குறித்த திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த (28) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



இந்தியா, நைஜீரியா, ஈரான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து பெரும்பாலான மூலிகைகளைப் பெற்றே எமது நாட்டில் மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்காக பெருமளவிலான நிதிகளை எமது அரசு செலவிட்டும் வருகின்றது. இந்தத் திட்டத்தை எமது மாகாணத்திலும் செயற்படுத்தினால் இந்தச் செலவினங்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

எமது மாகாணத்தில் இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு போதுமான வளங்களும், மிகப் பொருத்தமான இடங்களும் இருக்கின்றன.

அதற்கான முன்னெடுப்புக்களைச் சிறந்த முறையில் செயற்படுத்த, சிறு பண்ணையாளர்கள் மற்றும் தோட்ட செய்கையாளர்களையும் ஊக்குவித்து, மருந்து உற்பத்தி செய்வதற்கான மூலிகைப் பொருள்களை அவர்களிடமிருந்து பெற்றுகொள்ள முடியும்.– என்றார்.

# வீட்டுக்குள் துர்நாற்றம் வீசிய நிலையில் மீட்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவரது சடலம்!

இரத்தினபுரி, கலவான பகுதியில் சில நாள்களுக்கு முன்பு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட ஒருவரின் சடலம், துர்நாற்றம் வீசிய நிலையில் வீட்டுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் நாவலகந்த, ஹெட்டிகந்தவத்த பகுதியில் வசிக்கும் 68 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரின் மனைவி வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளார். ஒரு மகள் திருமணமாகி தனியாக வசித்து வருகிறார்.அவர் தனது 19 வயது மகளுடன் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

19 வயது மகள் தற்போது வீட்டிலிருந்து காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த யுவதி தனியார் பயிற்சி நிறுவனத்தில் செவிலியராக பயிற்சி பெற்று வந்துள்ளார்.

அவரை திருமணம் செய்யவிருந்த இளைஞன் சுமார் 2 நாள்களாக அவருடைய தொலைபேசிக்கு அழைப்பு மேற்கொண்ட போதிலும் அதற்கு அவர் பதிலளிக்கவில்லை. இதனால் காதலியை தேடி இளைஞன் அவருடைய வீட்டிற்கு சென்றுள்ளார்.

அங்கு, வீட்டிலிருந்து கடுமையான துர்நாற்றம் வீசியுள்ளது. அந்த இளைஞன் இது தொடர்பில் அயலில் மக்களுக்கு தகவல் அளித்துள்ளார். பின்னர், இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் நடத்திய தேடுதலின் போது, உயிரிழந்த நபரின் உடல் மீட்கப்பட்டது. அந்த நபர் தூங்கிக் கொண்டிருந்தபோது கூர்மையான ஆயுதத்தால் கழுத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, அந்த நபரை மகள் கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில் காணாமல் போன மகளைக் கண்டுபிடிக்க, கலவான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கிழக்கில் கண்ணகி தாயின் வைகாசிச் சடங்கு!

**விபுலமாமணி வித்தகர்**
**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு.**

வைகாசி பிறந்துவிட்டால் கிழக்கின் பட்டிதொட்டியெல லாம் பறையொலி முழங்க குழல்நய ஓசை எழுப்ப வைகாசிப் பொங்கல் நடைபெறுவது வழமை.

கிழக்கில் பெரும்பாலான தமிழ்க் கிராமங்கள் இந்தச் சடங்கால் களைகட்ட ஆரம்பித்துள்ளன.

நாளை (2) திங்கட்கிழமை இந்த வைகாசித் திருவிழாச் சடங்கு பெரும்பாலான கண்ணகி ஆலயங்களில் ஆரம்பமாகிறது.

வடக்கில் வற்றாப்பளை கண்ணகை அம்மனாலயத் திலும் இந்தச்சடங்கு சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

பூம்புகாரைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டிலே பிறந்து பாண்டியநாட்டிலே அரசியல் புரட்சி செய்து சேர நாட்டிலே தெய்வமாகிய கண்ணகை அம்பாள் சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித் தெய்யோ என இன்றும் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே வளர்க்கப்பட்டு வந்தது. கண்ணகை அம்மன் என்றும் பத்தினி தெய்யோ என்றும் வழங்கப் பட்டுவந்தது.

கண்ணகி தமிழரிடையே ஒரு புதுத்தெய்வமாக உருப்பெற்ற கதையை சிலப்பதிகாரம் சுவைபடக் கூறுகிறது.

வானோர் வடிவில் வந்த கோவலனோடு தெய்வ விமானமேறி கண்ணகி வானகம் சென்ற காட்சியைக் கண்ட வேடுவர்கள் அவளைத் தெய்வமாகப் போற்றி னார்கள்.

'சிறு குடியீரே சிறு குடியீரே ...'.என்ற சிலப்பதிகார குன்றக்குரவைப் பாடலைப் பாடி வேங்கை மரத்தின் கீழ் எடுத்த முதற் சடங்கு கண்ணகி சடங்காகும்.அதனை யொட்டி கண்ணகி சடங்கு முறை வழக்குக்கு வந்தது.

சேரன் செங்கூட்டுவன் இமயத்திலிருந்து கல்லெடுத்துவந்து கங்கையில் நீராட்டி அக்கல்லிலிருந்து கண்ணகியின் சிலை வடித்து தனது தலைநகராம் வஞ்சிமாநகரில் அமைத்த ஆலயத்தில் பிரதிஸ்டை செய்தான். அங்கு இந்திரவிழா எடுத்தான்.

இந்த விழாவுக்குக் குடகக்கொங்கரும் மாளுவவேந்த னும் கடல்சூழிலங்கை கயவாகு வேந்தனும் வந்திருந் ததாக சிலப்பதிகாரம் கூறிநிற்கிறது. இச் சிலப்பதி காரத்தையும் பழைய ஏடுகளையும் வைத்து கிழக்கில் பல காப்பியங்களும் நூல்களும் வெளிவந்தன

கண்டி அரசன் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் (1629-1637) பாடப் பெற்ற தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியத்தில் மட்டக்களப்புப் பிராந்தியத்தில் 30 கண்ணகை அம்மன் ஆலயங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.அவற்றில் அங்கணாமைக்கடவை (வெளியிலிருந்தும்) முதலூ ராகக் குறிப்படப்பட்டுள்ளது. எனவே அதுவே முதல் ஆலயமாகக் கொள்ளலாம்.

### காரைதீவில் கண்ணகை அம்மன்

பிரசித்திபெற்ற காரைதீவு கண்ணகை அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கு நாளை திங்கட்கிழமை (2) கடல் நீர் எடுத்துவந்து கல்யாணக்கால் நடலுடன் ஆரம்பிக்கும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவிருக்கிறது.

'அணியாரங் கற்பிற் அருங்கலமே நல்ல வணிகர் குலத்துதித்த மாதே- பணிமணியின் சேர் சிலம்பணியும் செல்வியே காரைநகர் தாயே எமைக் காத்தருள் ' என்கிறது அம்மன் பாடல். சேரமன்னனின் அழைப்பின் பேரில் கடல்சூழ் இலங்கை மன்னன் கஜபாகு சென்றான் என்பது வரலாறு .

முப்பெரும் விழாவுக்குச் சென்ற கஜபாகு மன்னனின் அழைப்பின்பேரில் சேரன் செங்குட்டுவனின் வழிவந்த சேனாதிராசனின் விதவை மகளான தேவந்தி அம்மை யார் தனது மகள் சின்ன நாச்சியாருடன் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்து கண்டி மன்னரின் விருந்தினராக தங்கியிருந்த சில நாள்களின் பின்னர் யாத்திரையை மேற்கொண்டார்.

அம்மையார் தான் வரும்பொழுது தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளை கொண்டு வந்ததாகவும் அவற்றில் இரு சிலைகள் அகோரவடிவுடையதாகவும் ஒன்று சாந்த சொரூபமான வடிவம் கொண்ட சிலையாகும் என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

அம்மையாரின் யாத்திரை வழியில் ஏறாவூரில் அவர் அவருடைய சிலைகளில் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டார்.

பின்னர் மீதி இது சிலைகளுடன் காரைதீவு எனும் சைவமும் தமிழும் போற்றப்பட்ட பழம்பெரும் பதியில் வந்து தங்கினார். தேவந்தி அம்மையார் காரைதீவில் விருந்தோம்பலில் கவரப்பட்டு தங்கியிருந்த வேளையிலே அங்குள்ள வேம்பு மரத்தின் கீழ் தான் கொண்டுவந்த இரு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடு இயற்றினார்.

அந்த காலத்தில் கண்டி அரசனின் ராஜ பிரதிநிதியா கிய வன்னிமை அவரது மனைவி சகிதம் சிங்காரத் தோப்பில் இருந்து யானை மீதேறி நகர்வலம் வந்தார். அவர் அம்மையாரின் பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். அங்கு வன்னிமையின் மனைவியின் கண்ணொளி மங்கப் பெற்று அம்மையார் வேண்டிக் கொண்டதால் மீண்டும் கண்ணொளி பெற்றமை வரலாறு.

இதற்காக வன்னிமை அங்கு புனித ஆலயத்தை ஸ்தாபித்து அதனை நிர்வகிப்பதற்கு நூற்றி ஒரு ஏக்கர் நெல் காணிகளை நேர் கடனாக வழங்கினார்.இதனை 'கண்கண்வெளி' என அழைப்பர். இன்றும் அது உள்ளது.

கிராமத்தில் தேவந்தி அம்மையாரும் அவரது மகளான சின்ன நாச்சியாரும் வாழ்ந்து வருகையில் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த குடிமக்களின்

**தொடர்ச்சி▼**

# கிழக்கில் கண்ணகி தாயின் வைகாசிச் சடங்கு!

**தொடர்ச்சி▲**

பிள்ளைப்பேறு குறைந்துகொண்டு செல்வதனால் இதற்கு காரணமாக அமைந்த அமைந்த பத்தினி தெய்வத்தின் அகோர வடிவத்தை மக்களின் கோரிக்கையின் படி ஜனசந்தடி அற்ற பட்டிமேடு என்னும் கிராமத்தில் தேவந்தி அம்மையார் பிரதிஷ்டை செய்தார் .

அழகு நிறைந்த சின்னநாச்சியார் மீது மையல் கொண்ட இளைஞர்கள் அம்மையாருக்கும் அவரது மகளுக்கும் தொந்தரவு கொடுத்தனர். அதன் காரணத்தினால் சாந்த சொரூபமான பத்தினி தெய்வ விக்ரகத்துடன் தனது மகளுடனும் தம்பிலுவில் என கிராமத்துக்கு இடம் பெயர்ந்து விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தார்.

இந்த நிலையில் காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய் அம்மை நோய் என்பது துயரங்களை கொடுத்தன.இதன் காரணமாக மக்கள் தம்பிலுவில் கிராமத்துக்குச் சென்று தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்து பத்தினி தெய்வத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்து அம்மையாரின் வேண்டுகோளின்படி கற்புக்கரசி கண்ணகியைக் குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர்.

இந்தப் பெருவிழாவில் கொம்பு முறித்தல், போர்த் தேங்காய், உடைத்தல், தட்டு வசந்தன் போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தன என்பது வரலாறு கூறும் செய்திகள் ஆகும்.

பெருவிழா வைகாசித் திங்களில் வருடா வருடம் ஆரம்பிக்கின்றது. முதல் நாள் பட்டயம் கூறுகின்ற நிகழ்வும் இடம்பெற்று வந்தது. வைகாசிப்பொங்கல், திருக்குளிர்த்தி, குழுத்தி எனும் நாமங்கள் அழைக்கப்பட்டு வந்த இந்த சடங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுவது அம்பாளின் அனுக்கிரகமே.

**திருக்குளிர்த்தி**

பொதுவாக ஈழநாட்டிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழா தமிழ் மாத வைகாசி பௌர்ணமியில் இடம்பெறும் .ஆயினும் காரைதீவு மற்றும் வற்றாப்பளையில் கோயில் கொண்டிருக்கும் பத்தினி தெய்வத்தின் திருவிழா வைகாசி பௌர்ணமி திங்கட் கிழமை நடைபெறும். ஆயினும் திங்கட்கிழமை அல்லது வைகாசி பௌர்ணமியில் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை நடைபெறுவது மரபாகும்.

கண்ணகி வழக்குரையில்... "வைகாசித் திங்கள் வருவேன்..." என்று கூறுகின்றது. அதை அடியொற்றி திங்கள் என்பது பௌர்ணமியும் திங்கட்கிழமையும் குறிப்பதாகும்.

காரைதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் தமிழ் மாதம் வைகாசி திங்கட்கிழமை நடைபெற்று வருவது மரபுவழி வந்ததாகும்.

**முதல் நாள் நிகழ்வு**

இவ்வாலயத்தின் திருவிழாவானது குளிர்த்தி நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்வரும் திங்கட்கிழமை அன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தவுடன் கல்யாண கால் நடுவது உடன் ஆரம்பமாகின்றது. இங்கு கல்யாண காலாக பூவரசம் மரமே தெரிவு செய்யப்படுவது மரபாகும்.

சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவு செய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் உள்ள பூவரச மரத்தில் உள்ள பூவரசு மரத்தின் கிளையை ஆயுதம் பாவிக்காமல் முறித்து அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்துக்குக் கொண்டு செல்வார்கள்.

ஆலயத்திலேயே பத்தினித் தெய்வத்துக்கு முன்பாக பூவரச மரக் கிளையை நட்டு கப்புகனார் கிரியைகள் செய்து கூறை சேலை அணிவித்து ஆலயத்தில் உணர்வு பூர்வமாக நடுவார்கள். அங்கு பூசைசெய்து முதல் நாள் நிகழ்வு நிறைவடையும்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை (03) இரவு 7 மணிக்கு கல்யாண காலுக்கும் அம்பாளுக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர் உடுக்கை அடித்து ஊர் சுற்று காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தொடங்கி ஞாயிறு வரைக்கும் பகல் ஒரு மணிக்கு அம்பாளுக்கு பூசையும் மாலை 7 மணிக்கு மணிக்கு அம்பாளுக்கு உடுக்கை அடித்து ஊர்சுற்றுக் காவியம் பாடுதலுடன் 5 நாள்களில் நிகழ்வு நிறைவு வரும் .

ஐந்து நாள்களிலும் பத்தினி தெய்வத்தின் பகல்பூஜை செய்யும்போது அம்பாளுக்கு சோறும் கறியும் படைக்கப்படும். இதனை பச்சை கட்டுதல் என்று அழைப்பார்கள்.

இந்த ஆலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் மரபுரீதியான சிறப்பான பிரசாதம் சோறும் கறியும் ஆகும் .

**குளிர்த்தி**

இறுதி நாளான திங்கட்கிழமை முழுநாளும் பூஜைகள் இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவார்கள் ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் காவடி எடுத்தும் நேர் கடன்களை செலுத்துவார்கள்.

அன்றைய தினம் பக்தர்கள் உபவாசமிருந்து பத்தினி தெய்வத்திடம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுஷ்டிப்பார்கள்.திங்கள் முழு நாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக் கதைபாடப்படும்.

இறுதிநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அம்பாளுக்கு சிறப்பான விசேட பூஜை இடம்பெற்று தொடர்ந்து குளித்திபாடல் பாடி வழிபடுவர்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனைக் குளிர்விக்கும் பொருட்டு கலயத்தில் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம் தாமரைப் பூக்கள் சிலம்பு அம்மானைக் காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சமான வேம்பு மரத்தின் பெறப்பட்ட இலைகளால் பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப கலயத்தில் எடுத்துச்செல்லப்படும் நீர் தெளிக்கபடும்.

அவ்வேளையில் எட்டு திசைகளிலும் இருந்து வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் குளிர்த்தி பாடல்கள் பாடி முடித்ததும் கப்புகனாரால் மங்கல கீதம் பாடப்பெற்று சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

குளிர்த்தி முடிவடைந்ததும் பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.

**எட்டாம் சடங்கு**

குளிர்த்தி முடிந்து. அடுத்து வரும் திங்கட்கிழமை அம்பாளுக்கு எட்டாம் சடங்கு இடம்பெறும். பிற்பகல் 3 மணியில் இருந்து கிராமத்து மக்கள் அங்கு தனித் தனியாக புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியை கொண்டு பொங்கலிட்டு நேர்த்தி செய்வார்கள். இது ஆலயத்தின் விசேஷமான அம்சம் என்பதை குறிப்பிடலாம்.

யாழ். நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாவையும் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தாவையும் இந்நாட்டிற்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகி தாயை காரைதீவு தமிழ் கிராம மக்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டு வருகின்றார்கள்.

பாரம்பரிய வைகாசி திருக்குளிர்த்தி சடங்கு நாட்டு மக்கள் மனங்களில் நம்பிக்கை மிகுந்த வாழ்க்கையை உருவாக்கட்டும்.

# சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

நாட்டில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்காக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

அமைச்சரவையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,


சிறுவர்களுக்கு துஷ்பிரயோகம் ஏற்படும் அனைத்து வகையான வன்முறைகளில் இருந்தும் பாதுகாக்க பல துறை பொறிமுறை ஒன்றை நிறுவும் நோக்கத்துடன் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சி செயற்பட்டு வருகிறது.



சிறுவர்களுக்கு பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதற்கான இந்த பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையின் முக்கியதவத்தை வெளிப்படுத்த வேண்டும் மேலும், இந்த பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையை நிறுவதற்கு ஜனாதிபதி, சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சு, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு ஆகியன இந்த பன்முகத் தன்மை கொண்ட பொறிமுறையை நிறுவ உத்தரவிட்டனர். அமைச்சுக்களின் அமைச்சர்களால் பெறப்பட்ட பயனுள்ள அவதானிப்புகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் எமது அரசின் ஊடாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகம் மற்றும் அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் சிறுவர்களை பாதுகாக்க அறிமுகப்படுத்தப்பட்ட இந்த பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையின் நிர்வாகம், செயல்முறை மற்றும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணையம், நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் துறை ஆகியன தொடர்பில் மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சின் செயலாளர் விளக்கினார்.

இந்தப் பொறிமுறை எவ்வாறு செயற்படுகிறது என்பதை அந்த நிறுவனங்களின் தலைவர்கள் தெளிவுபடுத்தியமை குறிப்பிடதக்கது.



# சிப்பியாறு புனித அந்தோனியார் திருவிழா!

(வாஸ் கூஞ்ஞ)

கோடி அற்புதரான வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மறை மாவட்டத்தில் அமைந்துள்ள சிப்பியாறு புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழா எதிர்வரும் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

யாத்திரிகர்களின் வணக்கத் தளமாக இருக்கும் இந்த ஆலயத்தின் பரிபாலகர் அருட்பணி லோறன்ஸ் அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்விழா முன்னிட்டு நேற்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றமும் திருப்பலியும் இடம்பெற்றன.

நாளை (02) திங்கள் கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனையும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலியும் இதைத் தொடர்ந்து காலை 10.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியும் இதைத் தொடர்ந்து மதியம் 3 மணிக்கும் மாலை 5 மணிக்கும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும்.

ஒவ்வொரு திருப்பலி நிறைவிலும் திருச்சுரூப அசீர் இடம்பெறும் என்று இவ் ஆலயத்தின் பரிபாலகர் அருட்பணி லோறன்ஸ் அடிகளார் தெரிவித்தார்.





# சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு பிரசாரமும் கொடி விற்பனையும் ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் போதைப் பொருள் எதிர்ப்பு பிரச்சார நடவடிக்கையும் கொடி விற்பனையும் நேற்று சனிக்கிழமை வைபவ ரீதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக்கால் சாய்ந்தமருது - 12 ஆம் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் தலைமையில் நடைபெற்ற இன்றைய ஆரம்ப நிகழ்வில் தொழிலதிபர் எம்.யூ.நியாஸ், தலைப்பிட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், நிதி உதவியாளர் ஏ.எம்.றியாஸ் உள்ளிட்ட அதிதிகள், சமுர்த்தி அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் எதிர்ப்பு பிரச்சாரம் மற்றும் கொடி விற்பனை நிகழ்வுகள் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல கிராம சேவக பிரிவுகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டம் ஜுன் 17 வரை இடம்பெறவுள்ளது.

இதன் அங்கமாக போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு எதிர்வரும் 04 ஆம் திகதி சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இதில் சகல பெண்களும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் இதன் போது அழைப்பு விடுத்தார்.








# கொரோனா பாதிப்பு 3,000 ஐ நெருங்கியது; கேரளா, மகாராஷ்டிரா, டில்லி முன்னிலை

இந்தியாமுழுவதும்கொரோனாதொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3 ஆயிரத்தை நெருங்கி உள்ளது.

ஹொங் கொங், சிங்கப்பூர், சீனா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட தெற்கு ஆசிய நாடுகளில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவி வருகிறது. இந்நிலையில், இந்தியாவிலும் மே மாத தொடக்கத்தில் கொரோனா தொற்று மீண்டும் பரவத் தொடங்கியது. கடந்த மே 26 ஆம் திகதி இந்தியா முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,010 ஆக இருந்தது. இது 30 ஆம் திகதி 2,710 ஆக அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சக புள்ளி விவரம் கூறுகிறது.

கொரோனா தொற்று பரவலில் கேரளா, மகாராஷ்டிரா, டில்லி ஆகியவை முன்னிலை வகிக்கின்றன. அதிகபட்சமாக கேரளாவில்1,147 பேர், மகாராஷ்டிராவில் 424, டில்லியில் 294 , குஜராத்தில் 223, தமிழ்நாட்டில் 148 பேருக்கு இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பஞ்சாபைச் சேர்ந்த ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் மூத்த குடிமக்கள் என சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இப்போது பரவி வரும் கொரோனா தொற்று லேசானதுதான் என்றும் இதுபற்றி அச்சப்படத் தேவையில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேநேரம், நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக மத்திய, மாநில அரசுகளின் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் பதிவு அதிகாரிகள் நியமனம்



தமிழகத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவை பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் 234 தொகுதிகளுக்கும் வாக்காளர் பதிவு அதிகாரிகளை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டு மே மாதம் சட்டப்பேரவை பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் பூத்கொமிட்டி அமைத்தல், தேர்தல் பொறுப்பாளர்கள் நியமனம் என அடிப்படை பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சில கட்சிகள் வேட்பாளர்கள் தேர்வையும் நடத்தி வருகின்றன.

தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில், கூட்டணியை இறுதி செய்யும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. தற்போதைய சூழலில் தமிழகத்தில் 4 முனை போட்டி இருக்கும் என தெரிகிறது. தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி, நடிகர் விஜய்யின் த.வெ.க. மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சிகள் தனித்தனியாக களம் காண தயாராகி வருகின்றன. தேர்தல் நெருங்கும் நேரத்தில் இதில் ஏதேனும் மாற்றங்கள் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

இது ஒருபுறம் இருக்க, இந்திய தேர்தல் ஆணையமும் தேர்தலுக்கான அடிப்படை பணிகளை தொடங்கியுள்ளது. ஜனவரி மாதம் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது, இதுவரை பட்டியலில் பெயர் சேர்க்காதவர்கள், புதிய வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்களை சேர்ப்பதற்கான வாய்ப்புகளை தேர்தல் ஆணையம் வழங்கி வருகிறது. வாக்காளர்கள் தங்கள் பெயர்களை ஆன்லைன் மற்றும் செயலி வாயிலாக சேர்க்க முடியும்.

இதற்கிடையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் இதற்கான கருத்துகளையும் கேட்டு அதன்படி பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதை ஒட்டியே சமீபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் டெல்லியில் தேர்தல் ஆணையம் நடத்திய கூட்டத்தில் பங்கேற்று கருத்துகளை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், வாக்காளர்கள் பதிவை முறைப்படுத்துவது, குளறுபடிகளை களைவது போன்ற பணிளுக்காக தொகுதிவாரியாக வாக்காளர் பதிவு அதிகாரிகளை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. இதில், தமிழகத்தில் 234 தொகுதிகளுக்குமான வாக்காளர் பதிவு அதிகாரிகள் யார் என்ற பட்டியலை, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், அரசிதழில் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, அந்தந்த மாவட்டங்களில் உள்ள கூடுதல் ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர், உதவி ஆட்சியர், சார் ஆட்சியர் , மாநகராட்சிகளில் உதவி ஆணையர், நிலையில் உள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், அந்தந்த தொகுதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் பணிகளை முழுமையாக கண்காணிப்பார்கள். தேர்தல் நெருங்கும் வேளையில், மாவட்ட வாரியாக பார்வையாளர்களும் நியமிக்கப்பட்டு, வாக்காளர் பட்டியல் சீரமைக்கும் பணிகளும் நடைபெறும்.



# அணுசக்தி ஒப்பந்த முன்மொழிவுகளை ஈரானுக்கு அனுப்பியது அமெரிக்கா

அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பான முன்மொழிவுகளை அமெரிக்கா, ஈரானுக்கு அனுப்பியுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஓமான் வெளிவிவகார அமைச்சரின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த முன்மொழிவுகளை ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி பொறுப்பேற்றுள்ளார்.

அணுசக்தி ஆயுதங்களை உற்பத்தி செய்வதில் முக்கிய அங்கமான செறிவூட்டப்பட்ட யுரேனியம் உற்பத்தியை ஈரான் அதிகரித்துள்ளதாக, ஐக்கிய நாடுகள் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த அறிக்கையை அடுத்து அமெரிக்கா தமது முன்மொழிவுகளை ஈரானுக்கு அனுப்பியுள்ளது.

மேற்படி ஒப்பந்தத்தை ஈரான் ஏற்றுக் கொள்வது சிறந்த விடயமாக அமையுமென வெள்ளை மாளிகையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா - இந்தியா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம்

## ட்ரம்ப் அறிவிப்பு



அமெரிக்கா, இந்தியா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, கனடா, மெக்ஸிகோ உட்பட பல்வேறு நாடுகள் அமெரிக்க பொருள்களுக்கு அதிக வரி விதிப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார். இதற்கு பதிலடியாக கடந்த ஏப்ரலில் அவர் சமர்சீர் வரி விகிதத்தை அறிவித்தார்.

இதன்படி சீன பொருள்களுக்கு அதிகபட்சமாக 145 சதவீத வரியை அமெரிக்கா விதித்தது. இதுதொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அண்மையில் சுமுக தீர்வு எட்டப்பட்டது. இதன்படி சீன பொருள்களுக்கு 0 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாக அமெரிக்கா, சீனா இடையே அண்மையில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்திய பொருள்களுக்கு 26 சதவீத வரியை அமெரிக்கா விதித்துள்ளது. இதை குறைப்பது தொடர்பாக அமெரிக்காவுடன் இந்திய அமைச்சர்கள், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வொஷிங்டனில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“அண்மையில் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் நடைபெற்றது. இந்த போர் அணு ஆயுத போராக மாறும் அபாயம் எழுந்தது. அமெரிக்கா தரப்பில் இரு நாடுகளிடமும் வர்த்தகத்தை முன்னிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதால் போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இந்தியாவும் பாகிஸ்தானும் துப்பாக்கி குண்டுகளால் மோதுகின்றன. நாங்கள் வர்த்தகத்தை முன்னிறுத்துகிறோம். இந்தியா, பாகிஸ்தான் இடையே அணு ஆயுத போரை நிறுத்தியதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன். உலகம் முழுவதும் நாங்கள் போரை நிறுத்துகிறோம். உலகின் மிகப்பெரிய ராணுவத்தை கொண்ட நாடாக நாங்கள் விளங்குகிறோம். அமெரிக்க தலைவர்கள் மிகச் சிறந்த தலைவர்களாக போற்றப்படுகின்றனர்.


வரிவிதிப்பு தொடர்பாக அமெரிக்கா, இந்தியா இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்த பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. விரைவில் இரு நாடுகளிடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும். இந்தியாவும் பாகிஸ்தானும் போரில் ஈடுபட்டால் அந்த நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட ஆர்வம் காட்ட மாட்டேன்.” என்றார்.

பக்கங்கள் 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 01/06/2025

## சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது



டொரோண்டோவில் நடைபெற்ற ஆரம்பப் பாடசாலை கால்பந்து போட்டி ஒன்றின் போது, குழந்தைகளிடம் 03



# அமெரிக்காவின் வரி விதிப்பினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள்

## கனடிய பிரதமர் மார்க் கார்னி அறிவிப்பு

அமெரிக்க வரி விதிப்புக்கள் காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் வழங்கப்படும் என கனடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்டிரம்ப் ஆரம்பித்துள்ள வர்த்தகப் போர், கனடியா நகரங்களின் பொருளாதாரத்தை பாதிக்கத் தொடங்கியுள்ள நிலையில், பிரதமர் இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கனடா நகராட்சிகளின் கூட்டமைப்பின் ஆண்டு மாநாட்டில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 03

# இரு சிறுமிகள் மீது துஷ்பிரயோகம் தமிழர் மீது அதிகரிக்கும் குற்றச்சாட்டு



கனடாவில் கைதான தமிழர் மீது மேலும் பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கனடாவின் அஜாக்ஸ் பகுதியை சேர்ந்த மேற்படி தமிழர் மீதே மேலும் புதிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கனடாவில் 14 வயது சிறுமியை கடத்தி, பல நாள்கள் அடைத்து வைத்து துஷ்பிரயோகம் செய்தார் என கடந்த மே 2ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றொரு 14 வயது சிறுமியையும் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என வெளியாகியுள்ளது.

மேற்படி சந்தேகநபர் கடந்த வியாழக்கிழமை அஜாக்ஸில் உள்ள ஒரு வீட்டில் கைது செய்யப்பட்டார், மேலும் அவர் பாலியல் வன்கொடுமை மற்றும் குழந்தைகளை ஆபாசமாக சித்தரித்தல் உள்ளிட்ட ஆறு புதிய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

அவர் மீதான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் சோதிக்கப்படவில்லை.

பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர், மேலும் தகவல் தெரிந்தவர்கள் புலனாய்வாளர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்கள்.



# குழந்தைகளுக்கு கட்டாய தடுப்பூசி செலுத்துவதை ஆதரிக்கின்றனர் 70 வீதமான கனடியர்கள்

கனடியர்களில் சுமார் 70 வீதமானவர்கள் குழந்தைகளுக்கு கட்டாய தடுப்பூசி செலுத்துவதை ஆதரிக்கின்றனர் எனத் தெரிவிக்கிறது.

தட்டம்மை நோய்த்தொற்று பல மாகாணங்களில் பரவி வரும் வேளையில், இந்த புதிய கருத்துக்கணிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்கஸ் ரீட் இன்ஸ்டிடியூட் நடத்திய இக்கருத்துக் கணிப்பு மே 20 முதல் 23 வரை சுமார் 1,700 பேரிடம் மேற்கொள்ளப்பட்டது.

அதில் 69 வீதமானவர்கள் குழந்தைகள் playschool அல்லது பாடசாலைக்கு செல்லும் முன் தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டில் மட்டும் ஒன்றாறியோ மாகாணத்தில் அக்டோபரிலிருந்து 1,800 தட்டம்மை நோய்த்தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஆல்பெர்டா மாகாணத்தில் மட்டும் 628 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒன்றாறியோ மற்றும் நியூ பிரன்ஸ்விக் மாகாணங்களில் பாடசாலைக்கு செல்ல தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆனால் இதுபோன்ற கட்டாய விதிமுறைகள் நாடு முழுவதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்ணை பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்திய இளைஞர் டொரொண்டோ பொலிஸாரால் கைது



டொரொண்டோவில் 22 வயது இளைஞர் ஒருவர், பெண் ஒருவரை பல மாதங்கள் பாலியல் வியாபாரத்திற்கு கட்டாயப்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் மீது 27 குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளன என டொரொண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரால் மேலும் பலர் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு குறித்து பொலிஸார் கடந்த ஏப்ரல் மாதம் விசாரணையை தொடங்கியுள்ளனர்.

அதில், குற்றஞ்சாட்டப்பட்ட நபரையும், பாதிக்கப்பட்ட பெண்ணையும் ஒரே பகுதியிலுள்ள குடியிருப்பில் வசித்து வந்தபோது ஒருவரை ஒருவர் சந்தித்தனர் என தெரியவந்துள்ளது.

அதன் பின்னர், குற்றவாளியானவர் பெண்ணை ஏமாற்றம், கட்டாயம் மற்றும் மிரட்டல் ஆகியவற்றை பயன்படுத்தி சுமார் மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்தியுள்ளார் என பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மேற்படி சந்தேக நபருக்கு எதிராக மனிதக் கடத்தல், கட்டுப்பாடுகள் மூலம் பெண்களை பாலியல் வியாபாரத்திற்கு பயன்படுத்துதல், மற்றும் நிபந்தனை மீறல் உள்ளிட்ட 27 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## அமெரிக்காவின் வரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாமதம் இல்லாமல் திட்டங்களை நிறைவேற்றும் பரிமாணத்திற்கு நாம் நகரப்போகிறோம் என என்று உறுதியளித்தார்.

துறைமுகங்கள், குழாய்க் குழாய்கள் போன்ற தேசிய முக்கியத்துவமுள்ள உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் வழங்கும் சட்டமூலத்தை தயாரித்து வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

கனடா வளர்ச்சிக்கு தடையாக அல்ல, தூண்டுகோலாக மாறுவோம் என்று கார்னி வலியுறுத்தினார். கனடாவின் திறன் வளர்ச்சி பல ஆண்டுகளாக நிசப்தமாய் இருந்தது. இது அரசு நிதியை சிரமமாக்கியுள்ளது.

மக்கள் வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துள்ளன. சமூக நலத் திட்டங்களின் நிலைத்தன்மையே சந்தேகமடைகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஒன்டாரியோ முதலமைச்சர் டக் போர்ட், வரும் முதல் அமைச்சர்கள் கூட்டத்திற்கு முன் தனது முக்கிய கோரிக்கைகள் பட்டியலை ஒட்டாவாவுக்கு அனுப்பியுள்ளார்.

## சந்தேக நபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொண்ட ஒரு 35 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

35 வயதான லியாண்ட்ரோ டி சொய்சா பார்போசா என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் சிறுவர்களிடம் அநாகரீகமான வகையில் நடந்து கொண்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தைகளை தேவையின்றி அலைபேசியில் படமெடுத்தார் எனவும் அவர்களை தூக்கினார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.